# வீரசேகரவின் கருத்தைக் கண்டித்து சட்டத்தரணிகள் நாளை போராட்டம்!

## முல்லைத்தீவு நீதிமன்ற முன்றலில்

கொழும்பு, ஜூலை 10

தமிழ் நீதிபதிகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர சபையில் தெரிவித்த கருத்தைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் இன்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

குறித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை முற்பகல் 10.30 மணியளவில் முல்லைத்தீவு நீதிமன்ற முன்றலில் அடையாளக் கண்டனப் போராட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கண்டனப் போராட்டத்தில் வடக்கு மாகாண இதர சட்டத்தரணிகள் சங்கங்களின் உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.


மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 25 திங்கட்கிழமை 10.07.2023 கதிர் 23



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## பொலிஸ்மா அதிபரானார் மீண்டும் சி.டி. விக்ரமரத்தின



பொலிஸ்மா அதிபராக சி.டி. விக்ரமரத்னவின் பதவி காலம் நீடிக்கப் பட்டுள்ளது.

நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

பொலிஸ்மா அதிபராக இருந்த சி. டி. விக்ரமரத்ன கடந்த மார்ச் 25 ஆம் திகதி ஓய்வுபெறவிருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவருக்கு மூன்று மாத காலத்திற்கு சேவை நீடிப்பு வழங்கினார். அந்த 3 மாத சேவை நீட்டிப்பு ஜூன் 25 அன்று முடிவடைந்தது.

இதையடுத்து அவர் அலுவலகத்தை விட்டு வெளியேறியிருந்தார். அதனால், இலங்கையில் பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படாத அசாதாரணமானதொரு நிலை காணப்பட்டது.

இந்த நிலையில், நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து சி.டி.விக்ரமரத்னவின் பதவிக் காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு ஒக்ஸ்ட் மாதத்தில் வெளியாகும்

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாத நடுப்பகுதியில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

அத்துடன், 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை நத்தார் பண்டிகைக்கு முன்னர் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆனையிறவு சோதனைச் சாவடியில் வைத்து 6 கிலோ கஞ்சாப் பொதியுடன் சிக்கிய நபர்



சுமார் 6 கிலோகிராம் கஞ்சாப் பொதியுடன் வந்த ஒருவரை ஆனையிறவுச் சோதனைச் சாவடியில் வைத்துப் பொலிஸார் நேற்று இரவு கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி முறிப்புப் பகுதியைச் சேர்ந்த 31 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

கிளிநொச்சி – பளை பொலிஸாருக்குத்

2

## அஜித் ரோஹன அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணை ஒத்திவைப்பு



தென் மாகாணத்தில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு எதிராக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 17 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன உட்பட ஏழு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யுமாறு பொது பாதுகாப்பு அமைச்சினால் கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, அஜித் ரோஹன, தனது இடமாற்றத்திற்கு எதிரான இந்த கடிதமொன்றைப் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்திருந்தார். அத்தோடு தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து மனுவொன்றையும் அவர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

## அனுமதிப் பத்திரம் இல்லாத பேருந்தொன்றே மன்னம்பிட்டியில் விபத்துக்குள்ளாகியுள்ளது

### போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவர்



பொலன்னறுவை மன்னம்பிட்டி பிரதேசத்திலுள்ள கொட்டலீய பாலத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான பேருந்துக்கு தேசியப் போக்குவரத்துச் சபையின் அனுமதிப் பத்திரம் இருக்கவில்லை என்று போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ஷஷி வெல்கம கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வீதி ஒழுங்கு முறைச் சட்ட விதிகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. ஒழுங்கு விதிமுறைகளை மீறிப் பயணிக்கும் பேருந்துகளுக்கு மிக அதிகளவிலான தண்டப்பணம் அறவிடும் வகையில் தற்போது சட்டம் ஒழுங்கமைக்கப் படுகின்றது. அதற்கமைவாகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப் படும்.

நேற்றிரவு விபத்துக்குள்ளான பேருந்தினைச் சார்ந்தவர்களுக்கும் அதற்குப் பொறுப்பானவர்களுக்கும் எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும், என்று அவர் கூறினார்.

இவ்வாறான பேருந்துகள் குறித்து எங்களுக்குத் தகவல் கிடைத்தவுடன், நடமாடும் பரிசோதனைக் குழுக்களை ஈடுபடுத்து, நாங்கள் பரிசோதனைகளை மேற்கொள்வோம். அவ்வாறு பேருந்துகளின் தகவல்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துத் தண்டனை பெற்றுக்கொடுத்த பல சந்தர்ப்பங்கள் உள்ளன, எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி மன்றங்களை மீள அழைக்கும் வரைவு எதிராக நீதிமன்றத்தை நாடுகின்றது பப்ரல் அமைப்பு

கொழும்பு, ஜூலை 10

உள்ளூராட்சி மன்றங்களை மீளக் கூட்டுவதற்கு ஏதுவாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணை வரைபுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளதாக பப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலமானது அரசியலமைப்பை தெளிவாக மீறுவதாக பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், அது தவறான முன்னுதாரணமாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலங்கை - சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல! - மஹிந்தானந்த வலியுறுத்து



இலங்கை நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரித்தானதல்ல. இது அனைத்து இலங்கைப் பிரசைகளுக்கும் சொந்தமானது. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதோடு, அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையாக வாழப் பழக வேண்டும், என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை மறந்துவிடவேண்டாம்!, என கடந்த வாரம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது சரத் வீரசேகர முல்லைத்தீவு நீதிபதிக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்து

2

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# ஊடக சுதந்திரத்தையும் மக்களையும் சட்டங்களால் அடக்கும் அரசாங்கம்!



இலங்கை அரசாங்கம் ஊடக நிறுவனங்களுக்கு எதிராக புதிய சட்டங்களைக் கொண்டு வந்து, ஊடக சுதந்திரத்தை அடக்கி ஆள முற்படுகின்றது என அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றைய தினம் இடம்பெ-ற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டதை விடவும் பயங்கரமான சட்டத்தை கொண்டு வந்து மக்களை அடக்கி ஆள இலங்கை அரசாங்கம் முனைகின்றது என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில், தொழிலாளர்களின் சேமலாப நிதி மற்றும் ஊழியா நம்பிக்கை நிதி என்பன தொடர்பில் முரண்பாடுகள் ஏற்பட்டு தொழிலாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இவ்வேளையில், தொழி-லாளர்களுக்கு எதிரான ஒரு சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்து நிர்க்கதியான சூழலுக்குள் தள்ளுமாக இருந்தால், தொழிலாளர்களின் நலன்களை முன்னிறுத்தி அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு வீதியில் இறங்கிப் போராடும்!, என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் இலங்கை சுதந்திர தினத்திற்கு முன்பாக தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்த நிலையில், அடுத்த சுதந்திர தினமும் வெகு விரைவில் வந்துவிடும். இருப்பினும், அதற்கு முன்னர் என்றாலும் தமிழரின் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் ஜனாதிபதி அக்கறையுடன் செயற்பட்டு தீர்வைப் பெற்றுக்கொடுப்பார் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் இல்லாமல் போயுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி, பொது மன்னிப்பின் அடிப்படையில் ஒருசில தமிழ் அரசியல் கைதிகளை, ஐக்கிய நாடுகள் சபையை ஏமாற்றும் நோக்கில் விடுதலை செய்து, தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வது போல் நாடகமும் ஆடியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், தியாகி திலீபனின் நினைவேந்தலுக்கு சுடரேற்றியமையை ஒரு குற்றமாகக் கருதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து அவரை மன உளைச்சலுக்கு உட்படுத்தியுள்ளனர்.

தமிழின விடுதலைக்காகப் போராடும் அரசியல் வாதிகளை அச்சுறுத்தி, போராட்டக் களத்திலிருந்து விரட்டியடிப்பதற்கு முனைகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வீட்டில் உறக்கத்தில் இருந்த இளைஞர் சுட்டுக்கொலை!

### முல்லைத்தீவில் பயங்கரம்


முல்லைத்தீவு மாவட்டம், மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலி நகர் பகுதியில் உள்ள வீடொன்றில் மர்மநபர்கள் நுழைந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தூக்கத்தில் இருந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று நள்ளிரவு வீட்டின் வாசல் கதவைத் திறந்து கொண்டு உள் நுழைந்த மர்மநபர்கள், அறை ஒன்றில் உறக்கத்தில் இருந்த இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

உயிரிழந்த நபர் ஒரு கொலைச்சம்பவத்தில் சந்தேகநபராகக் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டு, சில நாட்களுக்கு முன்புதான் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மல்லாவிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் பேரழிவு அறிக்கை கோரும் உயர்நீதிமன்றம்



எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் அனர்த்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உச்ச நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் ஊதியம் வழங்கப்படவில்லை, என்று மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அளித்த சமர்ப்பணங்களுக்கு இணங்க உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## சீனாவில் சிறுவர்கள் பாடசாலையில் கத்திக்குத்து 6 பேர் பலி - ஒருவர் காயம்


சீனாவின் தென்கிழக்கு குவாங்டாங் மாகாணத்தில் சிறுவர்கள் பாடசாலை ஒன்றில் நடந்த கத்-திக் குத்துச் சம்பவத்தில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் சீன பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து, குறித்த கத்திக் குத்துச்சம்பவத்துடன் தொடர்புடையவு என்ற குடும்பப் பெயர் கொண்ட 25 வயதுடைய நபரை கைதுசெய்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

கொல்லப்பட்டவர்களில் ஆசிரியர் ஒருவர், இரண்டு பெற்றோர் மற்றும் மூன்று மாணவர்கள் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இன்று, உள்ளூர் நேரப்படி 7:40 அளவில் குறித்த தாக்குதல் நடந்ததாகவும், சந்தேக நபர் 8 மணிக்கு கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## துறைமுக அதிவேக நெடுஞ்சாலை செப்டம்பரில் மக்கள் பாவனைக்கு



அடுத்த வருடம் செப்டெம்பர் மாத இறுதிக்குள் தூண்களினால் நிர்மாணிக்கப்படும் துறைமுக நுழைவு அதிவேக நெடுஞ்சாலை மக்களிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் சீன பொறியியல் மற்றும் நிர்மாண நிறுவன அதிகாரிகள் நேற்றுப் பார்வையிட்டனர். அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நிர்மாணப் பணிகளில் இதுவரை 70 வீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இங்குரு கடை சந்தியிலிருந்து கொழும்பு துறைமுகம் ஊடாக துறைமுக நகரம் வரை செல்லும் இந்த அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் கடந்த 2019 செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டன. 5.3 கிலோமீற்றர் நீளமுடைய இந்த அதிவேக நெடுஞ்சாலை, ஐந்து நுழைவு வீதிகளையும் நான்கு வழிப் பாதைகளையும் கொண்டுள்ளது.

இதன் நிர்மாணச் செலவுகள் 360 மில்லியன் அமெரிக்க டொலர்களென மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் 300 மில்லியன் டொலர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### இலங்கை - சிங்கள .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதித்துறைக்கு பெரும் அச்சுறுத்தல், என்று தமிழ் அரசியல் தலைவர்கள் கண்டனம் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் மாநாட்டின் போது, சரத் வீரசேர பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் மஹிந்தானந்த அளுத்கமகேவின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் மெற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வெவ்வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. அதற்கமைய ஒரு சிலர் சிங்கள பௌத்த மக்களுக்காக மாத்திரம் பேசி, அவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

வேறு சிலர் அடிப்படைவாதத்துக்குச் சார்பான கரு-த்துக்களை முன்வைத்து, அவர்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகின்றனர். இவ்வாறானவர்கள் இலங்கையில் பல்வேறு இனங்களையும், மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் வாழ்கின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, மக்கள் பிரதிநிதிகள் தேசிய ஒற்றுமைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும், என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனது தொகுதியான நாவலப்பிட்டியில் அனைத்து இன மக்களும் வாழ்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் நான் தலைமை வகிக்கின்றேன். அவ்வாறிருக்கையில், இது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு எனக் கருதுவது தவறு. அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையுடன் வாழ நாம் பழக வேண்டும்.

இலங்கை அனைத்து இன மக்களுக்கும் சொந்தமான நாடாகும். எனவே சரத் வீரசேகர தெரிவித்த கருத்து அவரது தனிப்பட்ட நிலைப்பாடேயன்றி, அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல. இது தொடர்பில் எவரும் வீணாகக் கலவரமடையத் தேவையில்லை, எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஆனையிறவு சோதனைச் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகவும், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நீதிமன்றில் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
- maalaikkathir@gmail.com

# யாழ் மாவட்ட தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பில் புதிய தீர்மானங்களெதுவும் மேற்கொள்ளப்படவில்லை

## மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் கல்விநிலையங்கள் பற்றிய தீர்மானத்தில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை எனவும், இது தொடர்பாக வேறெந்த அமைப்புகளும் தன்னுடன் பேச்சுவார்த்தை நடாத்தவில்லை எனவும் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

தனியார் கல்வி நிறுவனங்களை ஞாயிற்றுக்கிழமை இயக்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டு மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் வெளியான நிலையில், அதனை மாவட்டச் செயலாளர் மறுத்து, இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

தனியார் கல்வி நிறுவனங்களை ஞாயிற்றுக்கிழமை இயக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டு மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடப்பட்டதாக கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை. எந்த அமைப்பும் என்னுடன் இது தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளவில்லை. தனியார் கல்விநிலையங்கள் பற்றிய தீர்மானத்தில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை, என்று அவர் உறுதிப்படுத்தினார்.

2023 ஜூன் 9 ஆந் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற, பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக தனியார் கல்வி நிறுவனங்களிலும் பிரத்தியேக கல்வி வகுப்புக்களிலும் வாரத்தில் ஏழு நாட்களும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் பிள்ளைகளிற்கும் சமூகத்திற்கும் ஏற்படும் சாதக, பாதக நிலைமைகள் பற்றிய கலந்துரையாடலின் விளைவாக, ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமை மாலை நேரங்களிலும் தனியார் கல்வி நிறுவனங்களும் பிரத்தியேக வகுப்புக்களும் தரம் 9 வரையான மாணவர்களிற்கு வகுப்புக்களை நடாத்துவதனை தவிர்த்தல், எனும் தீர்மானம் ஜ/லை மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படமை குறிப்பிடத்தக்கது.



# 12 நாட்களாக அம்பாறையைச் சேர்ந்த பாடசாலை மாணவியை காணவில்லை

அம்பாறை கல்மடுவ பிரதேசத்தைச் சேர்ந்த சச்சினி சவிநத்யா சமரதுங்க என்ற 16 வயது பாடசாலை மாணவி ஒருவரை கடந்த 12 நாட்களாக காணவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவி கடந்த 28 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டுப்பாடசாலைக்கு சென்றிருந்த நிலையில், அன்றைய தினம் அவர் வீடு திரும்பவில்லை. அதே வேளை, பாடசாலைப் பதிவேட்டில் அவரது பெயர் இடம்பெறாததை அடுத்து பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மகள் காணாமல் போய் 12 நாட்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை என மாணவியின் தாய் தெரிவித்துள்ளார்.

மகள் கடந்த 28 ஆம் திகதி காலை சைக்கிளில் தனது தந்தையுடன் பாடசாலைக்குச் சென்றாள். அப்பா பாடசாலையில் அவரை விட்டுவிட்டு வீடு திரும்பினார். பாடசாலை முடிந்து 2.15 அளவில் வீடு திரும்பும் மகள் அன்று வரவில்லை.

பின்னர் 2.45 மணியளவில் பாடசாலைக்கு அழைப்பேடுத்தோம். அன்று 11 ஆம் வகுப்பு மாணவர்களை பயிற்சிக்கு வைத்துக்கொள்ளவில்லை, என விளையாட்டு ஆசிரியரும் கூறினார். பின்னர் மகளின் பெயர் அன்றைய தினம் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை என்றும் தெரியவந்தது. அதையடுத்து பொலிசில் முறைப்பாடு செய்துள்ள போதிலும் 12 நாட்களாகியும் எந்தத் தகவலும் இல்லை, என கூறியிருக்கிறார்.




# மலையகத்துக்கான தனி பல்கலைக்கழகம் விரைவில் உருவாகும் - அமைச்சர் பந்துல

மலையகத்துக்கான தனிப்பல்கலைக் கழகம் விரைவில் அமைக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். கொட்டகலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மலையகத்துக்கான பல்கலைக் கழகத்தின் அவசியத்துவம் பற்றி பலரும் வலியுறுத்தி வந்தனர். இந்த விடயத்தில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் துரிதமாக செயற்பட்டார். ஜனாதிபதியுடன் பேசி அனுமதிபெற்று, எனக்கும் அறிவித்தார்.

நிதியை திரட்டுவதற்கான வேலைத்திட்டத்தையும் அமைச்சர் ஜீவன் தயாரித்துள்ளார். அரச நிதியை பயன்படுத்துவதற்கு முன்னர் அதனைப் பெற முடியும். நிதி வழிமுறைகள் தொடர்பான அறிவிப்பை அமைச்சர் வெளியிடுவார்.

பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கு கொட்டகலை ஆசிரியர் கலாசாலை வளாகம் சிறந்த இடம். சூழவுள்ள பகுதியும் அரச காணியாகும். எனவே, எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைக்கு காணி பெறுவதிலும் சிக்கல் இருக்காது. முதலில் பல்கலைக்கழகத்தை நிறுவிவிட்டு, பின்னர் பீடங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளலாம்.

நுவரெலியாவில் இருந்து பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகும் மாணவர்கள் ஏனைய பகுதிகளுக்கே செல்கின்றனர். இங்கு பல்கலைக்கழகம் அமைந்தால் அதன்மூலம் அவர்கள் பயன்பெறுவார்கள்.

இன்று நான் கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டேன். இது தொடர்பில் கொழும்பில் கலந்துரையாடி இறுதி முடிவெடுக்கப்படும், எனவும் அமைச்சர் பந்துல குறிப்பிட்டார்.

# இணுவில் பொது நூலகத்தில் சிவ.தணிகாசலம் எழுதிய "செவாலியார் இளவாலை அமுது" நூல் வெளியீடு



பிரித்தானியாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர் சிவ.தணிகாசலம் எழுதிய "செவாலியார் இளவாலை அமுது" நூல் வெளியீட்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இணுவில் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின்முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் தேவராஜா தலைமையில் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. தலைமை உரையை ஆற்றிய அவர், பிரித்தானியாவில் வசிக்கும் பிரபலமான எழுத்தாளர் சிவ தணிகாசலம் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர். தனது "செவாலியார் இளவாலை அமுது" என்னும் நூலினை 2021 ஆண்டு பிரித்தானியாவில் உள்ள துர்க்கை அம்மன் ஆலயத்தில் வெளியிட்டவர் .

2022 ஆம் ஆண்டு இந்தியா பாண்டிச்சேரியில் உள்ள பிரபல பல்கலைக்கழகத்தில் இரண்டாவது நூலை வெளியிட்டதுடன் மூன்றாவதாக யாழ்ப்பாணம் இணுவில் பொது நூலகத்தில் இன்று வெளியிடுகிறார், எனத் தெரிவித்தார்.

நிகழ்வின் ஆசி உரையை சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் நிகழ்த்தினார். வாழ்த்துரையை ஏசிரி கல்வி நிலைய அதிபர் இரா.அருட்செல்வம் நிகழ்தியதுடன் முதற்பிரதியை இராமலிங்கம் மகாராஜா பெற்றார்.

# இங்கிலாந்து சென்றுள்ள ஜோ பைடன் உக்ரைன் நிலைவரம் குறித்து பேச்சு?

நேட்டோ உச்சி மாநாட்டுக்காக லிதுவேனியாவுக்குச் செல்லும் பயணத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இங்கிலாந்துக்கும் சென்றுள்ளார். அவர் அங்கு உக்ரைன் நிலைவரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் மிகப்பெரிய இராணுவக் கூட்டமைப்பான நேட்டோ அமைப்பின் உச்சி மாநாடு லிதுவேனியா தலைநகர் வில்னியசில் நாளையும் நாளை மறுதினமுமாக இரு நாட்கள் நடைபெறவுள்ளது. இதில் நேட்டோ உறுப்பினராக உள்ள பல நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

இந்த நிலையில், நேட்டோ உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்க லிதுவேனியாவுக்குப் பயணித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இங்கிலாந்துக்கும் சென்றுள்ளமை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இது உத்தியோகபூர்வமாகத் திட்டமிடப்பட்ட பயணமாக அமையவில்லை என்றாலும், அங்குள்ள விண்ட்சர் கோட்டையில் மன்னர் மூன்றாம் சார்ள்ஸை அவர் சந்திக்கவுள்ளார். கடந்த செப்டெம்பர் மாதம் ராணி இரண்டாம் எலிசபெத் இறந்த பின்னர், மன்னர் சார்ள்சை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்தச் சந்திப்பின்போது பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதிப்பு ஆகியவை குறித்து இருவரும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதற்கு முன்னதாக, இங்கிலாந்துப் பிரதமர் ரிஷி சுனக்கை பிரதமர் அலுவலகத்தில் வைத்து பைடன் சந்திக்கவு உள்ளார். அப்போது உக்ரைன் போர் நிலைவரம், நேட்டோவில் உக்ரைனை இணைப்பதற்கான வழிமுறைகள் ஆகியவற்றை மையமாக வைத்து இருவரும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு மற்ற நாடுகளைவிட அமெரிக்காவும், இங்கிலாந்தும் ஆயுத விநியோகம் மற்றும் பொருளாதார உதவிகளை அதிக அளவில் வழங்கியுள்ளன. இந்த நிலையில் தற்போது இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமையானது, நேட்டோ உச்சி மாநாட்டிலும் எதிரொலிக்கும் என நம்பப்படுகிறது.

## சிரியாவில் ஆளில்லாத விமானத் தாக்குதல் ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் மரணமானதாக தகவல்



சிரியாவில் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் படை மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் அவ்வப்போது தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், பொது மக்களும் இறப்பதாக செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன. ஆயுதக் குழுக்களை அழிக்கும் வேலையில் அரசுக்கு ஆதரவாக அமெரிக்கப் படைகள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், சிரியாவின் கிழக்கே ஆளில்லா விமா னத்தின் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில், ஐ.எஸ்.ஐ.எஸ். இன் முக்கிய தலைவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அமெரிக்காவின் மத்திய படைப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் ஒசாமா அல் முஹாஜிர் என்பவர் கொல்லப்பட்டுள்ளார் எனவும், இந்த அதிரடி நடவடிக்கையில், பொதுமக்கள் யாரும் உயிரிழக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க மத்திய படைப் பிரிவின் பிரதானி மைக்கேல் குரில்லா என்பவர் இந்த விடயம் பற்றிக் கூறும் போது, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அந்த பகுதிக்கு மட்டுமின்றி அதனைக் கடந்தும் தொடர்ந்து அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரை வீழ்த்துவதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம், என விளக்கியிருக்கிறார்.



## ஜப்பானில் கனமழைப் பொழிவு புகையிரத சேவைகள் முடக்கம்

ஜப்பான் நாட்டின் மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் கியூசு மற்றும் சுகோகு பகுதிகளில் கனமழை பெய்ததால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல பகுதிகளிலும் புகையிரதத் தடங்களிலும் வெள்ளம் சூழ்ந்தது.

அங்குள்ள ஹிரோஷிமா மற்றும் ஹகாட்டா புகையிரத நிலையங்களுக்கு இடையே உள்ள சன்யோ ஷிங்கன்சென்லில் புல்லட் ரெயில் செல்லும் வழித்தடம் உள்ளது. அங்கும் வெள்ளம் சூழ்ந்ததையடுத்து தற்காலிகமாக புகையிரத சேவைகள் முடக்கப்பட்டு இருப்பதாக மேற்கு ஜப்பான் ரெயில்வே தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

## சூடானில் மீண்டும் உள்நாட்டுப் போர் வெடிக்கும்! ஐ.நா. பொதுச் செயலர் குட்டெரெஸ் எச்சரிக்கை



சூடானில் இராணுவத்துக்கும் துணை இராணுவப் படைக்கும் இடையே மீண்டும் முழு அளவிலான உள்நாட்டுப் போர் ஏற்படக்கூடிய அபாயம் நிலவுவதாக என ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் எச்சரித்துள்ளார்.

சூடானின் தலைநகர் கார்ட்டூம் அருகேயுள்ள ஆம்டர்மன் நகரில் சனிக்கிழமை நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 22 பேர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்'.

வடக்கு ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவத் தளபதி ஜெனரல் அப்தெல்-பட்டா புர்கானுக்கும், ஆர்.எஸ்.எப். எனப்படும் துணை இராணுவப் பிரிவின் தலைவர் ஜெனரல் மொகமட் ஹம்டான் டகாலோவுக்கும் இடையே அதிகாரப் போட்டி நிலவி வருகிறது. இதன் காரணமாக கடந்த மாத ஏப்ரல் மத்தியில் இரு இராணுவப் பிரிவினருக்கும் இடையே கடும் மோதல் தொடங்கியது.

தலைநகர் கார்ட்டூம் உள்ளிட்ட நகரங்களில் இரு படையினரும் துப்பாக்கிச் சண்டையிலும், எறிகணைத் தாக்குதலிலும் ஈடுபட்டனர். இந்த மோதலில் பொதுமக்கள் 3,000 பேர் கொல்லப்பட்டு, 6,000 பேர் காயமடைந்ததாக சூடான் சுகாதார அமைச்சர் ஹெய்தம் மொகமட் இப்ராகிம் கடந்த மாதம் தெரிவித்திருந்தார். 29 லட்சம் பேர் பாதுகாப்புக் கருதி தங்களது வீடுகளைவிட்டு வெளியேறி சூடானின் பிற பகுதிகளிலோ அண்டை நாடுகளிலோ தஞ்சமடைந்ததாக ஐ.நா. தெரிவித்தது.

இந்த நிலையில், ஆம்டர்மன் நகரில் சனிக்கிழமை நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 22 பேர் உயிரிழந்தமைக்கு இராணுவமே காரணம் என துணை இராணுவப் பிரிவின் தலைவர் குற்றஞ்சாட்டியிருந்தார். ஆனால், ஆம்டர்மன் நகரில் வான்வழித் தாக்குதல் எதையும் நடத்தவில்லை என இராணுவம் மறுத்துள்ளது.

தலைநகர் கார்ட்டூமிலும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடும் மோதல் நிகழ்ந்ததாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஆம்டர்மன் நகரில் நடத்தப்பட்ட வான் வழித் தாக்குதல் கண்டிக்கத்தக்கது. சூடானின் தார்பூர் பிராந்தியத்தில் நடைபெற்று வரும் மிக மோசமான வன்முறையையும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதே நிலை நீடித்தால் சூடானில் மீண்டும் முழு அளவிலான உள்நாட்டுப் போர் ஏற்படக்கூடும், என ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் எச்சரித்திருக்கிறார்.

தார்பூர் பிராந்தியத்தில் அரபு அல்லாத இனக் குழுக்களின் மீது 2000 ஆம் ஆண்டில் அரசுப் படைகள் நடத்திய தாக்குதலில் லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டிருந்தனர். தற்போது தார்புர் பிராந்தியம் துணை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. துணை இராணுவம் தற்போது நடத்திவரும் தாக்குதலால் கடந்த கால இனப் படுகொலையை நோக்கி தார்புர் பிராந்தியம் திரும்பி வருவதாக அதன் ஆளுநர் மினி ஆர்கோ மினாவி அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


## சீனாவின் போஹாய் விரிகுடா கடல் பகுதியில் இராணுவப் பயிற்சி - கப்பல்கள் செல்லத் தடை!



சீனா சமீப காலமாக தாய்வான் கடற்பகுதியில் போர்ப்பயிற்சிகளை நடத்தி அங்கு பதற்றத்தை ஏற்படுத்தி வருவதாகக் குற்றச்சாட்டுகள் உள்ள நிலையில், தற்போது மஞ்சள் கடலின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள போஹாய் விரிகுடாவில் இராணுவப் பயிற்சி நடத்த சீனா திட்டமிட்டுள்ளது.

சீனாவின் ஹெபெய் மாகாணத்தி லுள்ள டாங்ஷான் நகரில் துப்பாக்கி சுடுதல் உள்ளிட்ட நேரடி இராணுவப் பயிற்சிகள் நடைபெறவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தப் பயிற்சியானது இன்று முதல் வருகிற 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும், இதனால் பயிற்சி நடைபெறும் பகுதிகளில் கப்பல்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் சீனாவின் கடல்சார் பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## கத்தோலிக்க சபைக்கு 21 புதிய கர்தினல்கள் போப்பாண்டவர் வத்திக்கானில் அறிவிப்பு



கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராகவுள்ள போப்பாண்டவருக்கு அடுத்த நிலையில்

உள்ள மதத் தலைவர்களான கர்தினல்கள் சிலர், புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 21 பேராயர்கள், இவ்வாறு புதிய கர்தினால்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்ற அறிவிப்பை போப் பிரான்சிஸ் நேற்று வத்திக்கானில் உள்ள புனித பீட்டர்ஸ் சதுக்கத்தில் நடந்த வாராந்திர நிகழ்ச்சியில் வெளியிட்டார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கர்தினால்களில் ஆஜென்டினாவைச் சேர்ந்த பேராயர் விக்டர் மனுவேல் பெர்னாண்டஸ் உள்ளிட்ட பிரபலமானவர்களும் இடம்பெற்றுள்ளனர். இதைத்தவிர கத்தோலிக்கர்கள் சிறுபான்மையினராக உள்ள ஹொங்காங்கைச் சேர்ந்த பேராயர் ஸ்டீபன் சாவ்-யான் சோவ், ச்சேர்ந்த பியர்பாட்டிஸ்டா பிஸபெல்லா ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்களாக உள்ளனர்.

இவர்கள் 21 பேரும் செப்டெம்பர் 30 ஆம் திகதியன்று முறைப்படி கர்தினால்களாக நியமிக்கப்படவுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறெசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.07.2023இல் வெளியிடப்பெற்றது.